**செ.வெ.எண்: 69** **நாள்: 31.01.2018**

## பத்திரிக்கை செய்தி

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பாக வெளியிடப்பட்ட வரைவு வார்டு மறுவரையறை கருத்துருக்கள் மீதான அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களின் ஆட்சேபணை/ கருத்துக்களை நேரடியாக கேட்பதற்கான மண்டல அளவிலான கூட்டம் மறுவரையறை ஆணையத் தலைவரும், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் திரு எம்.மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது.

வரைவு வார்டு மறுவரையறை கருத்துருக்கள் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளிலும், மாவட்ட அளவிலும் வெளியிடப்பட்டு, அக்கருத்துருக்களின் மீது அரசியல் கட்சிகள்/ பொதுமக்களின் ஆட்சேபணை/ கருத்துக்கள் தொடர்பான மனுக்கள் 12.01.2018 அன்று வரை பெறப்பட்டன.

அரசியல் கட்சிகள் பிரதிநிதிகள்/ பொதுமக்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஆட்சேபணை / கருத்துக்களை நேரடியாக தெரிவித்தனர். அவர்களுடைய கருத்துக்களை கேட்டறிந்து அவற்றின் மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவருக்கு மறுவரையறை ஆணையத் தலைவரான தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் அறிவுறுத்தினார்.

மேற்படி கூட்டத்தில் தமிழ்நாடு மறுவரையறை ஆணையத் தலைவரிடம் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் / பொதுமக்கள் 9 மனுக்கள் அளித்தனர்.

12.01.2018 அன்று வரை பெறப்பட்ட ஆட்சேபணை / கருத்துக்கள் மனுக்களில், 147 மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு மறுவரையறை ஆணையத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டன. மீதமுள்ள 295 மனுக்கள் பரிசீலனையில் செய்யப்படவுள்ளன. மேற்படி மனுக்களை பரிசீலனை செய்து ஒரு வார காலத்திற்குள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு மறுவரையறை ஆணையத்திற்கு உடனடியாக அறிக்கை அனுப்ப வேண்டுமென மாநிலத் தேர்தல் ஆணையர் அறிவுறுத்தினார்.

இலுப்பூர் மற்றும் கறம்பக்குடி பேரூராட்சிகளில் வார்டு மறுவரையறை கருத்துருக்கள் மீது ஆட்சேபணை மனுக்களை அளித்திருந்த பொதுமக்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு இந்த இரண்டு பேரூராட்சி வார்டு மறுவரையறை கருத்துருக்கள் மீதான தங்கள் ஆட்சேபணை மனுக்களை மறுபரிசீலனை செய்திட மறுவரையறை ஆணையரிடம் கோரிக்கை வைத்தனர். இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மறுவரையறை ஆணையர் இலுப்பூர் மற்றும் கறம்பக்குடி பேரூராட்சிகளில் வார்டு மறுவரையறை தொடர்பாக பெறப்பட்ட ஆட்சேபணை மனுக்களை திருச்சி மண்டல உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) அவர்கள் ஆய்வு செய்து, உரிய பரிந்துரையினை பேரூராட்சிகளின் இயக்குநர் மூலம் மறுவரையறை ஆணையத்திற்கு அனுப்பி வைத்திட தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மறுவரையறை ஆணையத்தின் உறுப்பினர்களான நகராட்சி நிர்வாக ஆணையர் திரு கோ.பிரகாஷ், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநர் திரு.கா.பாஸ்கரன், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு சு.பழனிச்சாமி, இ.ஆ.ப., மறுவரையறை ஆணையத்தின் செயலர்-உறுப்பினர் திரு த.சு. ராஜசேகர்,இ.ஆ.ப., மற்றும் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர்/ மாவட்ட மறுவரையறை அதிகாரி திரு சு.கணேஷ், இ.ஆ.ப., ஆகியோர்களும் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**